# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


பேச்சுப் போட்டி 2025

## ஆண்டு 6

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

இங்கு கூடியிருக்கும், மாணவச் செல்வங்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நடுநிலை யாளர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கங்கள். நான் இங்கு பேச எடுத்துக் கொண்ட தலைப்பு

# நட்புடன் உறவாடு

**“ உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு “ (2) ஆமாம்..**

நண்பனுக்குத் துன்பம் வந்தவுடன் தன் துன்பமாகக் கருதி காத்திட, விரைந்து சென்று உதவிட வேண்டும், என நட்பைப் பற்றித் திருவள்ளுவர், மிகவும் அழகாகக் கூறுகின்றார்.

யார் அந்த நண்பன்? நமது தேவையறிந்து, ஆபத்தில் உதவி செய்ய ஓடோடி வருபவனே உண்மையான நண்பன். அந்த நட்பு பள்ளிக் கல்வியுடன் முடிவடைவதில்லை. சிலவேளை, வாழ்க்கைக் காலம் முடியும் வரை தொடர்ந்து நீடிப்பதும் உண்டு.

நாம் கற்கும்போது நமக்குத் தெரிந்த விடயங்களை அருகில் உள்ள கல்வியில் குறைவான மாணவர்களுடன் பகிர்ந்து அவர்களையும் நம்மோடு “சமகல்வி” கற்க அழைத்துச் செல்ல வேண்டும்.

எப்போதும் கல்வியில் பின் தங்கியுள்ள மாணவர்களுடன் அன்பாகப் பழகி அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவர்கள் இன்புறும் வகையில் நம்மிடமுள்ள தேவைக்கதிகமான பொருட்களை அவர்களுடன் பகிர்ந்து வாழ வேண்டும்.

அன்பினால் இந்த உலகத்தையே ஆளலாம். **“அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்”** எனக்கூறி எனது பேச்சை முடிக்கின்றேன்.

நன்றி.
வணக்கம்.



**ஆக்கம்:**
**திரு. எல்விஸ் எமிலியானுஸ்**